DISABILITIES OF THE ARM, SHOULDER AND HAND

# DASH

## டாஷ் அளவீட்டை மதிப்பிடுதல்

2002 இளவேனிற் காலத்தில், டாஷ் அளவீட்டிற்கு ஒரு திருத்தப்பட்ட மதிப்பீட்டு செயல்முறையை அறிமுகப்படுத்தினோம். இந்த புதிய முறை அசலான முறைக்கு **அல்ஜீப்ரா கணிதப்படி** சமமானதாக இருக்கும் ஆனால் பயன்படுத்த எளிதானது, மேலும் திறம்பட்டது மற்றும் விடுபட்ட தரவை கையாள்வதில் குறைந்த சிக்கல் கொண்டது. இந்த காரணங்களுக்காக, இந்த திருத்தப்பட்ட முறையை பயன்படுத்துவதற்கு நாங்கள் பரிந்துரைக்கிறோம். எனினும், எந்த முறையை நீங்கள் பயன்படுத்தினாலும் ஒரே மதிப்பெண்ணை தான் அடைவீர்கள்.

டாஷ் இரு பகுதிகளாக மதிப்பிடப்படுகிறது: டாஷ் இயலாமை/ அறிகுறி கேள்விகள் (30 உருப்படிகள், 1-5 அளவில் மதிப்பிடப்படுகிறது) மற்றும் விருப்ப உயர் செயல்திறன் விளையாட்டு / இசை அல்லது வேலை தொகுதி (4 உருப்படிகள், 1-5 அளவில் மதிப்பிடப்படுகிறது).

### டாஷ் இயலாமை/அறிகுறி மதிப்பெண்

மதிப்பெண் கணக்கிடப்பட, 30 உருப்படிகளில் குறைந்தபட்சம் 27 முடிக்கப்பட்டிருக்க வேண்டும். முடிக்கப்பட்ட பதில்களுக்கு ஒதுக்கப்பட்ட மதிப்புகளை கூட்டி, ஐந்து மதிப்பெண்ணிற்கு ஒரு சராசரி மதிப்பாக அளவிடப்படும். பின்னர் இந்த மதிப்பில் ஒன்றை கழித்து, 25-ஆல் பெருக்கி, 100-க்கு ஒரு மதிப்பெண்ணாக மாற்றப்படும். 0-100 அளவு கொண்ட பிற அளவீடுகளோடு ஒப்பிடுவதை எளிதாக்க இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிகமான மதிப்பெண் அதிகபட்ச இயலாமையை குறிக்கும்.

டாஷ் இயலாமை/ அறிகுறி மதிப்பெண் = $\dfrac{[(n \text{ பதில்களின் கூட்டுத்தொகை}) - 1] \times 25}{n}$

n என்பது முடிக்கப்பட்ட பதில்களின் எண்ணிக்கைக்கு சமமாகும்.

### விருப்பத் தொகுதிகள் (விளையாட்டு/இசை அல்லது வேலை)

ஒவ்வொரு விருப்பத் தொகுதிக்கும் நான்கு உருப்படிகள் உள்ளன. இந்த கேள்விகளின் இயல்பு காரணமாக தனிநபர்களால் பயன்படுத்தப்படலாம் அல்லது பயன்படுத்தாமல் போகலாம். தொழில்முறை விளையாட்டு வீரர்கள்/ கலைஞர்கள் அல்லது பிற குழுக்களை சேர்ந்த தொழிலாளர்களின் குறிப்பிட்ட, ஆனால் அவர்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளை பாதிக்காத பிரச்னைகளை, மற்றும் 30-உருப்படிகள் கொண்ட டாஷ் மூலம் “கண்டறியப்படாமல்” போகப்படும் பிரச்னைகளை அடையாளம் காணுவதே விருப்பத் தொகுதிகளின் நோக்கமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட அதே முறையை பயன்படுத்தி விருப்பத் தொகுதியின் 4-உருப்படி தொகுதி மதிப்பெண் கணக்கிடப்படும். இந்த மதிப்பெண்ணை கணக்கிடுவதற்கு அனைத்து நான்கு கேள்விகளுக்கும் விடையளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு பதிலுக்கும் ஒதுக்கப்பட்ட மதிப்புகளை கூட்டி, நான்கால் வகுத்து (உருப்படிகள் எண்ணிக்கை), ஒன்றை கழித்து, 25-ஆல் பெருக்கி, 100-க்கு ஒரு மதிப்பெண்ணாக மாற்றப்படும்.

### விடுபட்ட உருப்படிகள்

10 சதவீதத்திற்கு மேலான உருப்படிகளை (அதாவது, 3 உருப்படிகளுக்கு மேல்) விடையளிப்பவர் முடிக்காமல் விட்டிருந்தால், உங்களால் டாஷ் இயலாமை/ அறிகுறி மதிப்பெண்ணை கணக்கிட முடியாது. இதே விதிமுறைப்படி, (அதாவது, 10 சதவீதத்திற்கு மேலாக உருப்படிகள் முடிக்கப்படாமல் இருக்க கூடாது), உயர் செயல்திறன் விளையாட்டு/கலைகள் நிகழ்த்துவது அல்லது வேலை தொகுதிகள் நான்கே உருப்படிகள் கொண்டிருப்பதால், எந்த விடுபட்ட மதிப்புகளும் ஏற்கப்படாது. இந்த விடுபட்ட தரவு “விதிமுறை”, அசல் மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீட்டு செயல்முறைகள் இரண்டிற்கும் பொருந்தும்.

Institute for Work & Health | Research Excellence Advancing Employee Health

© INSTITUTE FOR WORK & HEALTH 2006. ALL RIGHTS RESERVED.